# இலங்கையின் இரண்டாம் குடியரசுஅரசியலமைப்பு நெருக்கடிகளும் புதியஅரசியலமைப்பின் முக்கியத்துவமும் : ஒருவிமர்சனப் பகுப்பாய்வு.

# Crisis of second republic constitution and consequence of a new constitution in Sri Lanka: A critical analysis

**M.N. Fathima Nushra, M.N. Fathima Najmin, J. Jenat Neshany**
South Eastern University of Sri Lanka
naji2489@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியல் திட்டம் என்பது முக்கியமாக காணப்படுகின்றது. ஏனெனில் அதுவே முழுமையாக ஒரு அரசினை செயற்படுத்தும் கருவியாக இருப்பதோடு இவ் அரசியலமைப்பானது ஒவ்வொரு அரசிற்கும் ஏற்றவகையில் நெகிழும், நெகிழா அரசியலமைப்பாகவும் ஒற்றையாட்சி சமஷ்டியாட்சி அரசியலமைப்பாகவும் மற்றும் எழுதப்பட்ட எழுதப்படாத அரசியலமைப்பாகவும் அமைந்துள்ளது. இதன்படி இலங்கையானது எழுதப்பட்ட நெகிழா ஒற்றையாட்சி அரசியலமைப்பினைக் கொண்டுள்ளது. பிரித்தானியா இலங்கையில் காலணியாதிக்கத்தினை நிலை நாட்டிய காலம் முதல் இலங்கையில் முறையே 1833, 1910, 1921, 1924, 1931, 1947 ஆண்டுகளில் பல்வேறு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பும் அதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பும் இலங்கை மக்களால் தமக்கென உருவாக்கிக் கொள்ளப்பட்டது. இவ்வாறு 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பு இன்றுவரையிலும் இலங்கையில் நடைமுறையில் இருந்தாலும் இது பல்வேறு குறைபாடுகளையும் நெருக்கடிகளையும் கொண்ட அரசியலமைப்பாகவே காணப்படுகின்றது. இந் நெருக்கடிகள் மற்றும் புதிய அரசியலமைப்பின் முக்கியத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு விமர்சனப் பகுப்பாய்வாகவே இக் கட்டுரை இடம்பெற்றுள்ளது.

***பிரதான சொற்பதங்கள்****: காலணியாதிக்கம், ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி, அரசியலமைப்பு*

## அறிமுகம்

ஒவ்வொரு அரசுக்கும் அடிப்படையான ஒன்றாக அரசியல் அமைப்புமுறை விளங்குகின்றது. ஓர் அரசாங்கத்தினை வழிநடத்தும் ஓர் மூலமாக இது காணப்படுகின்றது. சட்டத்தினால் சட்டத்தின் ஊடாக நிறுவப்பட்ட அரசியல் சமுதாயம் ஒன்றின் வடிவமே அரசியல் திட்டமாகும் அதாவது நிச்சயமான உரிமைகளுடனும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாடுகளுடனும் கூடிய நிலையான நிறுவனங்கள் சட்டரீதியாக நிறுவிக்கொண்ட அரசியல் சமூக அமைப்பே அரசியல் திட்டம் ஆகும் என ஜேம்ஸ் பிறைஸ் குறிப்பிடுகின்றார். (Jothilingam,2004) .

டைசிஎன்பவரின் கருத்துப்படி "நேரிடையாகவோ மறைமுகமாகவோ ஓர் அரசின் இறைமையைஅதிகாரத்தினூடாக நடைமுறைப்படுத்துவதனை அல்லது பங்கிடுவதனை அரசியல் திட்டம் எனக் குறிப்பிடுகின்றார். (Ambalavanar Sivaraja,2006) அரசியலமைப்பு பற்றி பிறைஸ் பிரபுவிளக்கம் அளிக்கும் போது "ஒரு அரசின் அமைப்பு அதன் உறுப்புக்களிடையேசெய்யப்பட்ட அதிகாரப் பகிர்வு அவற்றின் அதிகாரஎல்லை , அதை செயற்படுத்தவேண்டியமுறை அரசாங்கத்தின் அமைப்பு அதன் உரிமைகள் இதற்கு மக்களிடமுள்ள கடமைகள் மக்களினன் உரிமைகள் போன்ற யாவற்றையும் உள்ளடக்கியதே அரசியல் திட்டமாகும். (www.lanka.school.com/archives/13497,204) இதனடிப்படையில் அரசியல் திட்டம் என்பது அரசாங்கத்தின் அதிகாரங்கள் ஆளப்படுவோரின் உரிமைகள் மற்றும் இவ்விருபகுதியினருக்கும் இடையிலான தொடர்புகளை வழிபடுத்தும் தத்துவங்களின்

தொகுப்புஎனலாம். அரசியலமைப்பு திட்டமானது நாட்டுக்குநாடு வேறுபடுகின்றது. பிரித்தானியாவை பொறுத்தவரை அங்கு ஒருசில விடயங்கள் எழுத்துவடிவிலும் மற்றையவை வழக்காறுகள் ஊடாகவும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு அந்நாட்டு மக்களால் பின்பற்றப்பட்டுவருகின்றன. இலங்கையை பொறுத்தமட்டில் இலங்கையின் சுதந்திரத்திற்குபிற்பாடு 1947 முதல் 1978 வரை இரண்டுமுறை அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. அதன்படி 1978 இல் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பானது இலங்கை மக்களால் தமக்கென உருவாக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச அரசின் குடியரசுத் திட்டம் எனப் பிரகடனம் செய்யப்பட்டதோடு இது நெகிழா அரசியல் யாப்பாகவும் விளங்கி வருகின்றது. 1978 தொடக்கம் 2016 வரை இதில் 19 சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் இவ் அரசியல் அமைப்பு பல்வேறு நெருக்கடிகளைக் கொண்டுள்ளது. இந்தவகையில் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு நெருக்கடிகள் , அதற்கு தீர்வான புதிய அரசியலமைப்பின் முக்கியத்துவம் என்பவற்றினை இது பெரும்பாலும் நோக்குகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை பிரதானமாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகும். ஆய்வுக்கான தரவுகள் நூல்கள் , ஆய்வுக்கட்டுரைகள் , அறிக்கைகள் , இணையத்தளக் குறிப்புக்கள் என்பவவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன. எனினும் நேரடி அவதானம் , நேர்காணல் , இலக்க்குழு கலந்துரையாடல் என்பன மூலம் பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளும் ஆய்வில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஆய்வின் பகுப்பாய்வு முடிவுகள் விபரண முறையில் வழங்கப்பட்டுள்ளன.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

இலங்கையானது நீண்டகால அரசியல் திட்டவளர்ச்சியினைக் கொண்டிருந்தாலும் 1970 க்குப் பின்னரே இலங்கை மக்கள் தமக்கான ஒரு அரசியலமைப்பை உருவாக்க முனைந்தனர். 1972 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் முதலாம் குடியரசு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் அது நீண்டகாலம் நிலைத்து நிற்கவில்லை. 1977ஆம் ஆண்டு தேர்தலைத் தொடர்ந்து ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலானஅரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் 1978 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்படி இவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையையுடைய அரசியலமைப்பினை இலங்கையில் அறிமுகப்படுத்தியதுடன் இவ்வரசியலமைப்பானது ஒற்றையாட்சி தன்மையுடையதாகவும் எழுதப்பட்ட அரசியலமைப்பாகவும் காணப்படுகின்றது. மேலும் இது 19 திருத்தங்களுடன் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனால் 2015 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் இவ் அரசியலமைப்பினை மாற்றுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதற்குபின்புலமாக இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் காணப்படும் நெருக்கடிகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்.

**01. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி**

இலங்கை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையைக் கொண்டுள்ளதாக இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் 7 ஆம் அத்தியாயம் குறிப்பிடுகின்றது. ஜனாதிபதிக்கு பல்வேறு அதிகாரங்களையும் வழங்க அவரை தற்துணிவு உள்ளவராக மாற்றியுள்ளது. அந்தவகையில் இலங்கையின் ஜனாதிபதி நிறைவேற்றுத்துறையில் மாத்திரமன்றி நீதித்துறை மற்றும் சட்டத்துறை ஆகிய முத்துறைகளிலும் செல்வாக்கு செலுத்துபவராக காணப்படுகின்றார். இதனை மேலும் பலப்படுத்துவதாக 18 ஆம் அரசியலமைப்பு சீர்திருத்தம் அமைந்திருந்தது. ஆனாலும்

19 ஆம் சீர்திருத்தம் இவரின் அதிகாரங்களை குறைப்பதற்காக உருவாக்கப்பட்டாலும் அதுமுழுமையாக பின்பற்றப்படவில்லை.

### 02. நீதித்துறை மற்றும் ஏனைய நீதி நிறுவனங்கள் என்பவற்றின் சுயாதீனம்

நீதித்துறையின் சுதந்திரத்தினை பாதுகாதத்தல் அரசின் கடமையாகக உள்ளதுடன் அது அரசியலமைப்பில் குறிப்பிடுதலும் அவசியமாகும். இலங்கை அரசியலமைப்பின் 15 ஆவது அத்தியாயம் நீதித்துறை பற்றி குறிப்பிடுகின்றது. எனினும் இதில் ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் மேன்முறையீட்டு நீதிபதிகளை நீக்குதல் என்பன சிக்கலுக்குரியதாக உள்ளது. உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல் , குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கல் எனும் விடயமும் நீதித்துறையின் சுதந்திரத்தினை பாதிக்கின்றது.

### 03. பலவீனமான பாராளுமன்றம்

சட்டத்தினை உருவாக்கும் ஸ்தாபனமாக பாராளுமன்றமானது காணப்பட்டாலும் அது இலங்கையில் சில குறைபாடுகளைக் கொண்டு பலவீனமாகக் காணப்படுகின்றது. அதாவது பாராளுமன்றத்தினை கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல் பாராளுமன்றத்தின் அதிகாரம் என்பவற்றில் ஜனாதிபதி ஆதிக்கம் செலுத்துவதுடன் பாராளுமன்ற தீர்மானங்களையும் மக்கள் தீர்ப்பு மூலம் ஜனாதிபதியினால் மாற்றமுடியுமானதாக உள்ளது. எனினும் 19ம் சீர்திருத்தமானது பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதி பொறுப்புக் கூறுதல் வேண்டும் என்பது பாராளுமன்றத்தின் அதிகாரத்தில் பாதுகாப்பதாக உள்ளது.

### 04. தேர்தல் முறையின் குறைபாடுகள்

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் விகிதாசாரதேர்தல் முறை இலங்கையில் உருவாக்கப்பட்டது. இது பல்வேறு குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. அதாவது தேர்தல் மற்றும் வாக்களிப்பு என்பது மக்கள் இறைமையை பிரதிபலிக்கும் ஒன்றாகும். இலங்கையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் முறையே காணப்படுகின்றபோதிலும் இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் வாக்களிப்பு தொடர்பாக மக்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. மேலும் தனியான கட்சிகள் பெரும்பாண்மை பெறமுடியாமை, இடைத்தேர்தல்கள் நடாத்தப்படுவதற்கான வாய்ப்பின்மை மக்களுக்கும் வேட்பாளர்களுக்குமிடையே உள்ள தொடர்பினைக் குறைக்கின்றது.

### 05. அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள்

மக்களுக்கான உரிமைகள் அரசியலமைப்பில் குறிப்பிடும் போது அது அடிப்படை உரிமைகளாகின்றன. இலங்கையானது பல்வேறு அடிப்படை உரிமைகளை யாப்பில் உள்வாங்கியுள்ளது. ஆனாலும் அதில் பல மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. அது இவ் அரசியலமைப்பினை நெருக்கடிகளுக்கு உள்ளாக்குவதுடன் சிக்கல் தன்மைகளுக்கும் தள்ளுகின்றது. அதாவது அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் என்பன மூலம் இலங்கையின் அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. அத்துடன் இது எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் நீடிக்கமுடியும். மேலும் மக்களின் உரிமைகளுள் ஒன்றான உயிர் வாழ்வதற்கான உரிமை எனும் அம்சம் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் உட்புகுத்தப்படவில்லை. இவ்வாறான குறைபாடுகள் மனித உரிமைகள் மீதான கேள்வியினை உருவாக்குகின்றது.

### 06. பாரபட்சமான கவனிப்பு

இலங்கையானது சிங்களவர், தமிழர், முஸ்லிம் , பறங்கியர் போன்ற பல இனங்களையுடைய நாடாக காணப்படுகின்றது. ஆனால் இலங்கையின் அரசியலமைப்பானது பெரும்பாண்மையினருக்கு கூடிய கவனிப்புக்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. அதனடிப்படையில் அரசமதமாக பௌத்தமதம் பிரகடனப்படுத்தப்பட்ட அதேவேளை அரசமொழியாக சிங்களமொழி முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக பெரும்பாண்மை மதத்துக்கென வழங்கப்படும் சிறப்புச் சலுகைகள் பன்முக சமூகம் மற்றும் கலாச்சாரத்தை பின்பற்றும் மக்களுக்கு மத்தியில் பாரபட்சத்தினை ஏற்படுத்துவதாய் இவ் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

### 07. அதிகாரப்பகிர்வு

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வு பலவீனமானதாக இருந்து வருவதுடன் வலுவற்றதாகவுமுள்ளது. அதன் காரணமாக மத்திய அரசாங்கம் அதனை பொருட்படுத்தாதிருக்கும் ஒரு நிலையும் காணப்படுகின்றது. இந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் முக்கியமான ஏற்பாடுகள் அது அறிமுகம் செய்யப்பட்டு 29 வருடங்கள் கடந்த பின்னரும் கூட இன்னமும் முறையாக அமுல் செய்யப்படாதிருந்து வருகின்றன. எமது அரசியலமைப்பு அதியுயர்வானதா என்ற கேள்வியை மிண்டும் எழுப்புகின்றது. நாடெங்கிலும் மாகாணசபைகள் முதல் அமைச்சர்கள் மாகாண அமைச்சரவைகள் ஆகிய தரப்பினர் இந்தப் பலவீனங்களை அனுபவித்து வந்துள்ளார்கள்.

### 08. முறைமையினைக் கொண்டிராத அரசியல்யாப்புத் திருத்தங்கள்

இலங்கை அரசியலமைப்பு நெகிழா அரசியலமைப்பாகக் காணப்பட்டாலும் அதில் யாப்புத் திருத்தங்களினை 2/3 பெரும்பாண்மையினால் கொண்டுவரமுடியும். அந்தவகையில் இலங்கையில் 2016 வரை 19 அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இவையனைத்தும் முறையற்றதாகவும் சிறப்பாகநிறைவேற்றப்படாததாகவும் காணப்படுகின்றது. ஓற்றையாட்சியை உடைய நாடாக இலங்கை காணப்பட்டாலும் 13 ஆம் சீர்திருத்தம் மூலம் மாகாணசபை உருவாக்கப்பட்டது. அது இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவும் அதிகாரப்பகிர்வினைக் கொண்டதாகவுமே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அவை உண்மையில் தற்காலத்தில் நடைமுறைச்சாத்தியத்திற்கு பல்வேறு சவால்களை எதிர்கொள்வதால் அதிகாரம் குவிக்கப்பட்ட நிலையிலுமே காணப்படுகின்றது.

எனவே இவ்வாறான நெருக்கடிகளை தடுக்கும் வாதமாக புதிய அரசியலமைப்பு முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. அதன்படி மக்கள் இறைமை பொருந்தியவர்களாகவும் அனைத்து மதங்களுக்கும் சம அந்தஸ்து உடையதாகவும் அடிப்படை உரிமைகள் சிறப்பானதாகவும் சிறந்த தேர்தல் முறையைக் கொண்டதாகவும் அதிகாரம் பகிரப்பட்டதாகவும் மற்றம் இலங்கைக்கு ஏற்ற ஒரு அரசியலமைப்பாகவும் இருத்தல் அவசியமாகும்.

### முடிவுரை

இலங்கையில் 1978 தொடக்கம் இன்றுவரை அமுலில் இருக்கும் அரசியலமைப்பானது பல்வேறு நெருக்கடிகளை கொண்டு காணப்படுகிறது. அந்தவகையில் நிறைவேற்றுஅதிகாரம் மிக்க ஜனாதிபதிமுறைமை, அடிப்படை உரிமைகளில் காணப்படும் குறைபாடுகள், இறைமை குன்றியபாராளுமன்றம் ;, வினைத்திறன் குறைந்த அமைச்சரவை, பெரும்பான்மை சமூகத்தின் மீதான அதீதகவனிப்பு போன்ற விடயங்கள் யாப்பில் இணக்காணப்பட்டுள்ள நெருக்கடிகளாகும். இவை பன்முக சமூகம் வாழும் இலங்கை மக்களுக்கு

மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதோடு அவை பலசந்தர்ப்பங்களில் மக்கள் இறைமையில் எதிர்மறையான தாக்கத்தை செலுத்திவருகின்றது.
இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டியது பிரதானமான ஒன்றாக அமைந்துள்ளது. அதனடிப்படையில் இது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் வேண்டும். முன்னைய யாப்புக்கள் அரசியல் உயர் குழாத்தினால் உருவாக்கப்பட்டது போன்று அன்றி புதிதாக கொண்டு வரப்படவுள்ள அரசியலமைப்பானது மக்களின் தேவைகள் மற்றும் அவர்களுக்கான சட்டங்களை உட்புகுத்துவனவாய் அமைதல் வேண்டும் அவ்வாறே அரசியல் , பொருளாதாரம் மற்றும் ஏனைய துறைகளிலும் பெரும்பான்மையினருக்கு மாத்திரம் சிறப்புச் சலுகைகள் வழங்கப்படாது யாப்பினூடாக சிறுபான்மை சமூகமும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

பல்வேறு நெருக்கடிகள் இணங்காணப்பட்டுள்ள முன்னைய யாப்பினை மாற்றி அதன் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு உருவாக்கப்படும் புதிய யாப்பானது பல்லின சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை ஓரளவு நிவர்த்தி செய்யவும் மக்கள் இறைமையை சிறப்பாக பேணவும் சிறந்ததொரு உத்தியாய் அமையும்.

**உசாத்துணைகள்**


1. யோதிலிங்கம்.சி.அ,(2004), ***"இலங்கையின் அரசியல் யாப்புக்கள்"*** ,குமரன் புத்தக இல்லம் ,கொழும்பு, சென்னை.
2. (1998),***"இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு",***பாராளுமன்றசெயலகம், இலங்கை.
3. சிவராஜா.அ,(2006) , ***"இலங்கைஅரசியல்"*** ,குமரன் புத்தக இல்லம் ,கொழும்பு, சென்னை.
4. இஸ்மாயில்.பி (2004)***,"1978 ஆம் ஆண்டு இலங்கைஅரசியலமைப்புஅரசியல் நெருக்கடிகளும் முரண்பாடுகளும் ஒருசமகாலப் பார்வை"*** ,ஸ்லைசோபதிப்பகம் , கொழும்பு.
5. புஞ்சிஹேவா எஸ்.ஜீ , ***"புதியஅரசியலமைப்புஏன் எமக்குஅவசியம்",***அரசியலமைப்புமாற்றத்திற்கானபிரஜைகளின் முயற்சி, கொழும்பு-05.
6. Jayampahi Wickramaratne, (2014), "Constitutional Reforms In Sri Lanka: Issues And Prospects", https://www.colombotelegraph.com
7. நிலவன், (2016),***"எமக்கு ஏன் புதியதோர் அரசியலமைப்பு***", www.thuliyam.com
8. முகுசன் மயீசுத்தீன், 2016.06.16,***"இலங்கைஅரசியலமைப்புசுயநலமா? சுரடவதிகாரமா?"***www.thinakural.lk
9. ***"இலங்கைஅரசியல் யாப்புவரலாற்றுச் சுருக்கம்",*** *(2014),* https://srilankaconstitution.wordpress.com/